நூறுமடங்காய்
ஆயிரமாய்
கோடி கோடியாய்

வானத்தின் நட்ச்சத்திரம் போல
கடற்கரை மணலை போல -2
பெருகவே பெருகச் செய்து
மகிழவே மகிழச் செய்வேன்-2

நூறுமடங்காய்

விருத்தியாக்குவேன்
வர்த்திக்கப்பண்ணுவேன்
பெருகவும் பண்ணுவேன் -2

நூறுமடங்காய்

சகல ஜாதியிலும் உன்னை
மேன்மையாகவே வைப்பேன் -2
உன் தேசத்தில் மழையை தந்து
தேசத்தை செழிக்கச் செய்வேன் -2

நூறுமடங்காய்

ஜாதிகளுக்கு கடன் கொடுத்து
பல ஜாதிகளை ஆசிர்வதிக்க -2
உன்னை உயர்த்துவேன்
உன்னை தலையாய் ஆக்குவேன் -2

நூறுமடங்காய்

பூமியின் எல்லையெங்கும் சென்று
எனக்காய் ஊழியம் செய்வாய் -2
ஒன்றிலும் குறைகள் இன்றி
உன்னை ஆசிர்வதிப்பேன் -2

நூறுமடங்காய்

மனைவி உன் வீட்டில் திராட்சை
கொடிபோல் படர்ந்திருப்பாள் -2
பிள்ளைகள் பந்தியை சுற்றிலும்
ஒலிவ கன்றுபோல் செழித்திருப்பார்
-2

நூறுமடங்காய்

நீ பார்க்கிற இந்த பூமியை
உனக்கு நான் தருவேன் -2
உன் சந்ததி நிலைத்திருந்து
எனக்காய் வாழ்ந்திடும் -2